மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எந்தெந்த வழித் தடங்களில் கேட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், இரண்டு வழித் தடங்களில் விட வேண்டுமென்று மனுக்கள் வந்து, அதைப் போக்குவரத்துக் கழகம் இப்போது ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறது.

—492

தொட்டாம்பட்டி, மேலூர் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமங்களுக்கு மினி பஸ்கள் விடும் திட்டம்.

*வினா எண் 21451—திரு. க. வெ. விராளம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி கொட்டாம்பட்டி மற்றும் மேலூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களுக்கு மினி பஸ்கள் விட அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வழித்தடங்களில் எப்போது விடப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) பத்து வழித்தடங்களில் மினி பஸ்கள் விட திருவாளர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை, ஆய்வு செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

திரு. க. வெ. வீரானம்பலம்: பேரவைத்தலைவர் அவர்களே, மேலூர், கொட்டாம்பட்டி வழியாக வெள்ளிமலை முருகன் கோவிலுக்கு பேருந்து விட அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதற்கான 10 வழித்தடங்களை நாங்கள் ஆய்வு செய்துகொண்டு வருகிறோம். அதிலே இதையும் சேர்த்து ஆய்வு செய்யலாம் என்று கருதுகிறேன். இந்த ஆய்வு முடிந்த பின்னர், இதைப் பற்றிச் சொல்ல முடியும்.

திரு. எல். இளைய பெருமாள்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற மனுக்கள் வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால், மேலூர் தொகுதியிலே அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு, நான் அவர்களிடம் சொல்லி, மினி பஸ்கள் விடுகிறார்கள். நீங்கள் மனுக்கள் போடுங்கள், கிடைக்கும்

1984 மார்ச் 28]

என்று சொன்னேன். ஆகவே, இந்த மினி பஸ்கள் விடுகின்ற இடத்திலே, இவர்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்கள் தனியாக பேருந்துகள் விடப்படுவது பற்றி கேள்வி கேட்டிருக்கிறார்கள். அரசாங்கம் பேருந்துகள் விடுவது பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால், தனியார்களுக்கு கொடுப்பதைப் பொறுத்தவரையில், அதிலே பல சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. யார் மனு போட்டிருந்தாலும், அதை பரிசீலனை செய்து 57 (2)-லே நோட்டிபை செய்து, அதற்குப் பின்னர் அதை 57 (3)-லே நோட்டிபை செய்து, முறைப்படி ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, யார் நேரடியாக மனுக்கள் போட்டிருந்தாலும், அவைகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே இதை இணைத்துப் பேசுவது என்பது முடியாத காரியம்.

493—

மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 17233—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மேற்கு தஞ்சை மாவட்டத்தில், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஆதி திராவிடர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தமிழ் நாடு குழாய்க் கிணற்றுக்கழகம் தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS